**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. மா.சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் பங்குனித் திங்கள் 11ம் நாள்

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் புதன்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 133/2025**

**CNR.No.TNMY07-000166-2025**

சீர்காழி தாலுக்கா, செம்பதனிருப்பு, பிள்ளையார்கோயில் தெருவில் கதவு எண்.748 முகவரியில் வசிக்கும் (லேட்). வீராசாமி அவர்களின் குமாரர் 72 வயதுள்ள கலியமூர்த்தி **...வாதி**

**...எதிர்...**

1. சீர்காழி தாலுக்கா, சீர்காழியில் வட்டாச்சியர் அலுவலகம் கொண்டு இயங்கி வரும் அதன் வட்டாச்சியர்.
2. மயிலாடுதுறை டி.மு.இலாகா மற்றும் தாலுக்கா, மயிலாடுதுறை டவுனில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கொண்டு இயங்கி வரும் அதன் மாவட்ட ஆட்சியர். **...பிரதிவாதிகள்**

கடந்த 18.03.2022ம் தேதியன்று இறந்துபோன குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என்ற விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி இறந்த குயிலம்பாளுக்கு வாதி மட்டுமே சட்டப்படியான வாரிசு என 1ம் பிரதிவாதி, வாதிக்கு வாரிசு சான்று வழங்கிட ஒரு செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இவ்வழக்கு தாக்கலான நாள் | 30.07.2025 |
| இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 01.08.2025 |
| இவ்வழக்கின் வழக்கு மூலம் ஏற்பட்ட நாட்கள் மற்றும் இடம் | 18.03.2022, 30.01.2023, 11.02.2023, 13.02.2023 ஆகிய தேதிகளில் சீர்காழி தாலுக்கா, செம்பதனிருப்பு கிராமத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது. |
| இவ்வழக்கின் பொருமானம் மற்றும் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் | இறந்த குயிலாம்பாளிற்கு வாதி மட்டுமே வாரிசு என விளம்பல் பரிகாரம் பெற வாதியின் பொருமானம் ரூ.5,000/– என நிர்ணயிக்கப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.150/–ம், |

| | |
|---|---|
| | இறந்த குயிலாம்பாளிற்கு வாதி வாரிசு என வாரிசு சான்று வழங்க 1,2 பிரதிவாதிகளுக்கு ஒரு செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வாதியின் பொருமானம் ரூ.1,000/- என நிர்ணயிக்கப்பட்டு அதற்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.30/-ம், ஆகக் கூடுதல் ரூ.6,000/-க்கு நீதிமன்றக் கட்டணமாக ரூ.180/- நீ.ம.க.ச. பிரிவு 25(d) மற்றும் 27(c)ன் படி செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 24.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. ஜீவானந்தம் அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. S. முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.

2. வாதி தான் கடந்த 18.03.2022ல் இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு என விளம்புகை செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3. அவ்விளம்புகை பரிகாரத்தினையொட்டி இறந்து போன குயிலம்பாள் என்பவரின் வாரிசு சான்றை வாதிக்கு, 1ம் பிரதிவாதி இன்றிலிருந்து இரண்டு மாதத்திற்குள் (25.05.2026) வழங்க வேண்டும் என செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

4. செலவுத்தொகை இல்லை.

**வாதி, பிரதிவாதிகள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் விபரம் தாக்கல் செய்யப்படவில்லை.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் என் கையொப்பம் இந்நீதிமன்ற முத்திரையுடன் இடப்பட்டது.

(ஒம்/- மா. சந்திரமோகன்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**<u>தீர்ப்பாணை</u>**
அசல் வழக்கு எண்.133/2025
நாள்.25.03.2026.